# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 142/2025** |
| Prosecution witness | : | P.W. 9 |
| List of witness | : | L.W. 10 |
| Name | : | சாமுவேல் |
| Father's /Husband Name | : | பொன்னுதுரை |
| Village | : | எரவாஞ்சேரி காவல் நிலையம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 33 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of April 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.06.2025 ம் தேதி அன்று நான் எரவாஞ்சேரி காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அந்தோணிசாமி மகன் பன்னீர்செல்வம் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து கடந்த 178.06.2025 ம் தேதி காவல் நிலைய குற்ற எண். 58/2025 BNS சட்டபிரிவுகள் 296(b), 118(1) ன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)**

பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 16.45 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரிக்கிபாண்டி, மோகனப்பிரியா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 குறியீடுசெய்யப்படுகிறது.)** மேற்படி பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன்.

பின்னர் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சமூக

நீதிமன்றத்தில் ஆஜராகி தக்க சட்ட வழிகாட்டுதலுடன் பிணையில் விடுக்கப்பட்டுள்ளார் என்ற விவரத்தினை தெரிந்து கொண்டேன்.

பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பன்னீர்செல்வம் என்பவர்க்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும் முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்த நன்னிலம அரசு மருத்துவமனை மருத்துவர் அர்ச்சனா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டினைபெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். (நன்னிலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு ஏற்கெனவே அ.சா.ஆ. 3 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது.) மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் காயம்பட்ட பன்னீர்செல்வம் என்பவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சி கிச்சைக்காக சென்ற போது அவரை மருத்துவர் மணிவேல் என்பவர் விசாரித்து விபத்து பதிவேடு பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்துள்ளார். மேற்படி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட் வாதிக்கு மருத்துவர் மோகன் ராஜ் என்பவர் சிகிச்சை அளித்து மருத்துவ சட்ட கருத்துரை வழங்கியுள்ளார். மேற்படி மருத்துவர்களை நான் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சட்ட கருத்துரையை பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். (திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ. 4 ஆகவும் மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.5 ஆகவும் ஏற்கெனவே குறியீடுசெய்யப்பட்டுள்ளது.) மேற்படி மருத்துவரின் மருத்துவ சட்ட கருத்துரையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சொற்ப காயம் என்று சான்று வழங்கியுள்ளார்.

இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது BNS சட்டபிரிவுகள் 296(b), 118(1), 351(3)ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 09.08.2025 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

சம்பவம் நடந்த நாள் என்னவென்றால் எனது விசாரணையின்படி 16.06.2025 என்று தெரிந்து கொண்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நியைத்திற்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் 4 கி.மீ. இடை வெளி இருக்கும். எங்கள் காவல் நிலையத்திற்கு தகவலை அழைப்பேசி மூலமாக தெரிவித்தால் வாகனம் மூலமாக சென்றால் 15 நிமிடத்தில் தகவல் தெரிவிக்கலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த நாள் 17.06.2025 மாலை 04.30 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை ஏன் காலதமதமாக பதிவு செய்யப்பட்டதற்கான காரணமத் குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் 17.06.2025 அதிகாலையில் தான் தகவல் எனக்கு கிடைத்தது. முதல் தகவல் அறிக்கையின் எட்டாவது காலத்தில் "No delay" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக பின்னிட்டு யோசித்து காலதாமதத்திற்கான

காரணத்ததை தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்திலிருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால் வாக்குமூலம் கொடுத்தவர்க்கு இலவசமாக நகல் கொடுத்து அதற்கு ஆதரவு பெற வேண்டும். அவ்வாறு இவ்வழக்கில் coloumn 14 ல் இலவசமாக நகல் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பன்னீர்செல்வம் என்பவரது கான்கிரீட் வீடு அருகே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சம்பவமானது வீட்டுக்குள் நடந்ததாக குறிப்புகளில் உள்ளது அதைப்பற்றி எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் வீட்டிற்கு அருகில் வேளி இருப்பதால் சம்பவ இடம் வீட்டிற்கு அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் கான்கிரீட் வீட்டை சுற்றி வேளி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ரத்தம் படிந்த மாதிரியை எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவத்தில் உபயோகிக்கப்பட்ட தடயபொருட்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை. அ.சா.1 முதன் முதலாக சிகிச்சையளித்துகொண்ட நன்னிலம் மருத்துவமனையில் என்ன கூறியுள்ளார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நன்னிலம் மருத்துவமனையில் கொடுத்த விபத்து பதிவேட்டில் குறிப்பாக ஒரு நபர் மட்டுமே தாக்கினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் பெண்மணி தாக்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அ.சா.1 எதிரி தாக்கியதாக சொல்லப்படும் அரிவாளின் தன்மை, விதம் குறித்து சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் முட்கள் எதுவும் பரவி கிடந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். உரிமையியல் பிரச்சனை சம்மந்தமாக ஏற்பட்ட காழப்புணர்ச்சி காரணமாக எதிரி மீது கொடுக்கப்பட்ட தவறான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 18:50:21 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.